பஞ்சாப் முதல்வர் பகவந்த்மான் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்! தொடக்கப் பள்ளிகளில் 3 லட்சத்து 5 ஆயிரம் மாணவ – மாணவியர் பயன்பெறும்

# ‘முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம்’ விரிவாக்கம்!

## சென்னையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் – இன்று தொடங்கி வைக்கிறார்!



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 15.9.2022 அன்று மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தைத் தொடங்கி வைத்து குழந்தைகளுக்கு உணவினை ஊட்டி மகிழ்ந்தார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 15.7.2024 அன்று திருவள்ளூர் மாவட்டம், கீழச்சேரி, புனித அன்னாள் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற விழாவில், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை ஊரகப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் பள்ளிகளிலும் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு விரிவுபடுத்தி தொடங்கி வைத்து, மாணவ, மாணவியர்களுடன் உரையாடினார்.

**சென்னை, ஆக. 26 -**

**தமிழ்நாடு முழுவதும் நகர்ப்புறப் பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 3 இலட்சத்து 5 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் வகையில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (26.8.2025) சென்னையில் தொடங்கி வைக்கிறார்கள். இந்நிகழ்ச்சியில் பஞ்சாப் முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்கிறார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், 15.9.2022 அன்று அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தை இந்தியாவிலேயே முதன்முறையாக மதுரை, ஆதிமூலம் மாநகராட்சி தொடக்கப் பள்ளியில் மாணவச் செல்வங்களுக்கு காலை உணவினை பரிமாறி திட்டத்தினைத் தொடங்கிவைத்தார்கள். இத்திட்டம் பெற்றோர்கள் மற்றும் மாணவர்களிடையே பெருத்த வரவேற்றைப் பெற்றது.

### கலைஞர் பிறந்த நாளில் திருக்குவளையில் தொடங்கிய முதல்வர்!

இதனால், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.8.2023 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த ஊராகிய திருக்குவளையில் உள்ள அரசுத் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை தொடங்கி வைத்தார்கள். இதன் மூலம் 30 ஆயிரத்து 992 பள்ளிகளில் பயிலும் 18 இலட்சத்து 50 ஆயிரம் மாணவ, மாணவியர்கள் காலை உணவை சூடாகவும் சுவையாகவும் உண்டு மகிழ்ச்சியோடு பள்ளிப் பாடங்களில் கவனம் செலுத்திப் படித்து வருகிறார்கள்.

அதன் தொடர்ச்சியாக 15.7.2024 அன்று பெருந்தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளில், திருவள்ளூர் மாவட்டம் கடம்பத்தூர் ஒன்றியம், கீழச்சேரி கிராமத்தில் உள்ள புனித அன்னாள் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளியில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம் செய்யப்பட்டு 3,995 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் 2 இலட்சத்து 23 ஆயிரத்து 536 மாணவ மாணவியர்கள் பயனடைந்து வருகிறார்கள்.

### பள்ளிக்கு வரும் மாணவர்கள் எண்ணிக்கை அதிகரிப்பு!

இத்திட்டத்தினால் பள்ளிக்கு வருகை தரும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதோடு, குழந்தைகளின் கற்றல் திறனும் மேம்படுத்தப்பட்டு 90%க்கும் அதிகமான குழந்தைகளின் முந்தைய பாடங்களை நினைவு கூர்வது அதிகரிப்பதாக ஆய்வறிக்கையில் காணப்பட்டுள்ளது. மேலும் மாணவ மாணவியர்கள் பசியின்றி பள்ளிக்கு வருவதால் ஊட்டச்சத்து குறைபாடினால் பாதிக்கப்படுவதும் களையப்பட்டதுடன் குழந்தைகளின் ஆரோக்யமும் மேம்படுத்தப் பட்டுள்ளது.

தமிழ்நாட்டைப் பின்பற்றி தெலங்கானா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்கள் தங்களது பள்ளிகளில் காலை சிற்றுண்டி திட்டத்தைத் தொடங்கியுள்ளனர். தமிழ்நாட்டின் காலை உணவுத் திட்டத்தை கனடா அரசும், தங்களது நாட்டில் நடைமுறைப்படுத்தி உள்ளது குறிப்பிடத் தக்கதாகும்.

### காலை உணவுத் திட்டத்தால் பயனடையும் மாணவர்கள்!

மேலும், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் நகர்ப்புறப் பகுதிகளில் அமைந்துள்ள 2,430 அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர்கள் இத்திட்டத்தின் கீழ் பயனடையும் வகையில் விரிவுபடுத்தப்படும் என்று 14.3.2025 அன்று அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நகரப் பகுதிகளில் உள்ள அனைத்து அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளிகளில் 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு முதலமைச்சரின் காலை உணவுத் திட்ட விரிவாக்கத்தை சென்னை மயிலாப்பூரில் உள்ள புனித சூசையப்பர் தொடக்கப் பள்ளியில் இன்று (26.8.2025) தொடங்கி வைக்க உள்ளார்கள்.

இந்நிகழ்ச்சியில் பஞ்சாப் மாநில முதலமைச்சர் பகவந்த் மான் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். இத்திட்டத்தின் வாயிலாக 3.05 இலட்சம் மாணவ-மாணவியர்கள் தினசரி பயன் பெற உள்ளார்கள்.

இந்த மகத்தான திட்டம் குறித்து நேற்று முன்தினம் ‘முரசொலி’யில், “கல்வியை வளர்க்கும் காலை உணவுத் திட்டம்” எனும் தலைப்பில் தீட்டியிருந்த “உங்களில் ஒருவன்” கடிதத்தில் இம்மகத்தான திட்டம் குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்ததாவது:-

**நாளைய தலைமுறையின் இன்றைய வளர்ச்சியில் அக்கறை கொண்டு தாயுள்ளத்துடன் செயல்படும் திராவிட மாடல் அரசின் மகத்தான திட்டமான முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் தமிழ் நாட்டில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்களையும் வளர்ச்சியையும் கருத்தில் கொண்டு, தெலங்கானா போன்ற அண்டை மாநிலங்களிலும் இதனைப் பின்பற்றுவதற்கான செயல்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டதும், இங்கிலாந்து - கனடா - இலங்கை உள்ளிட்ட நாடுகளில் காலை உணவுத் திட்டம் பற்றி அறிவிக்கப்பட்டிருப்பதும், உலகக் கண்ணோட்டத்துடன் தமிழ்நாடு செயல்படுவதை உறுதி செய்கிறது.**

**உணவை அளித்து உயிரை வளர்க்கும் தமிழர் மரபில், குழந்தைகளுக்குக் காலை உணவு தந்து கல்வியை வளர்க்கும் முதன்மையான பணியை மேற்கொண்டிருக்கும் உங்களில் ஒருவனான என் தலைமையிலான நம்முடைய அரசு அடுத்தகட்டமாக காலை உணவுத் திட்டத்தை நகர்ப்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் விரிவாக்கம் செய்யவிருக்கிறது.**

**இந்த விரிவாக்கத்தின் மூலம் நகர்ப்புறம் சார்ந்த 2 ஆயிரத்து 429 பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை படிக்கும் 3 இலட்சத்து 6 ஆயிரம் மாணவ - மாணவியர் பயன் பெறுவர்.**

**நாள்தோறும் திட்டங்கள், நலிவுற்றோர் ஏற்றம் காணும் செயல்பாடுகள், தமிழ்நாட்டை அனைத்துத் துறைகளிலும் முதன்மை மாநிலமாக்க வேண்டும் என்ற இலட்சிய நோக்கத்துடன் பயணிக்கும் திராவிட மாடல் அரசின் முத்திரைத் திட்டங்களில் ஒன்றான காலை உணவுத் திட்டத்தை விரிவாக்கம் செய்யும்போதெல்லாம் பள்ளிக் குழந்தைகளின் வயிறு நிறைகிறது. அவர்களின் அறிவு வளர்கிறது. பெற்றோரின் மனதில் மகிழ்ச்சிப் புன்னகை மலர்கிறது. தமிழ்நாடு, பிற மாநிலங்களுக்கு முன்னோடியாகத் திகழ்கிறது.**

இவ்வாறு “உங்களில் ஒருவன்” கடிதத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உணர்ச்சி மேலிடக் குறிப்பிட்டிருந்தார்.

# தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. அறிவிப்பு!



தருமபுரி, ஆக. 26 -

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வழக்கறிஞர் ஆ.மணி எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் இன்று (26.08.2025 - செவ்வாய்க் கிழமை) காலை 11.00 மணி அளவில் மாவட்ட கழக அலுவலகம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ் தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர்க் கழகச் செயலாளர்கள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் பணிக்குழு உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**பொருள்:** தேர்தல் பணிகள் குறித்து,

ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை குறித்து,

கழக ஆக்கப்பணிகள் குறித்து.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# திருச்சியில் பொறியாளர் அணி பொறுப்புக்கு நேர்காணல்!

## மாநில துணைச் செயலாளர் பரமேஸ்குமார் தலைமையில் நடைபெற்றது!

திருச்சி, ஆக.26 -

திருச்சி கலைஞர் அறிவாலயத்தில் தி.மு.க. பொறியாளர் அணி வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட மாநகர, ஒன்றிய, நகர, பேரூர் பொறுப்பாளர்களுக்கான நேர்காணல் 23ம் தேதி அன்று நடந்தது.

மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் பரமேஸ்குமார் தலைமையில் இந்த நேர்காணல் நடந்தது.

மத்திய மாவட்ட அமைப்பாளர் புருஷோத்தமன், வடக்கு மாவட்ட அமைப்பாளர் ரமேஷ், தெற்கு மாவட்ட அமைப்பாளர் ஜியாவுதீன், மாநகர அமைப்பாளர்கள் சித்தார்தன், மெய்யப்பன் ஆகியோர் நேர்காணலை நடத்தினர்.

இதில் பொறியாளர் அணி பொறுப்புகோரிய கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். மதியம் வரை நேர்காணல் நடைபெற்றது.

மாவட்டத் தலைவர் ஆலங்குடி இளங்கோவன் நன்றி கூறினார்.




சேலம் மாவட்டம், ஆத்தூர் ஒன்றியம் கீரிப்பட்டி பேரூராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமில் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான எஸ்.ஆர்.சிவலிங்கம் கலந்து கொண்டு பயனாளிகளுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட ஆணையத்தை வழங்கினார். அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன், மாவட்ட துணைச் செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, ஒன்றியச் செயலாளர்கள் இரா.வரதராஜன், டாக்டர் வே.செழியன், பேரூர்ச் செயலாளர் காங்கமுத்து, பேரூராட்சி தலைவர் தேன்மொழி, செயல் அலுவலர் வெங்கடாஜலம், தி.மு.க. நிர்வாகிகள் ஏ.ஏ.ஆறுமுகம், ராஜா, ரவி, சசிகுமார், கருணாநிதி, ரஜினி, ஜோதி, சந்திரமோகன், சிவராமன், ராமகோவிந்தன், ஆதிமூலம், செல்வராஜ், ராஜவேல், சதீஷ்குமார், சிக்கந்தர், விமல் சேகர், அன்பழகன், ஸ்ரீதர், ராமலிங்கம், கணேசன், ஜெயராமன், முரளி மனோகர், அர்ஜுனன், சமதர்மம், மற்றும் 13 துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரக கூட்டரங்கில், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகம் (தாட்கோ) மூலம் தமிழ்நாடு தூய்மைப் பணியாளர்கள் நலவாரியம் சார்பில், தற்காலிக தூய்மைப் பணியாளர்களுக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி மற்றும் தமிழ்நாடு தூய்மை பணியாளர் நலவாரியத் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி ஆகியோர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில், தமிழ்நாடு தூய்மை பணியாளர்கள் நலவாரியத் துணைத் தலைவர் திருமதி.கனிமொழி பத்மநாபன் முன்னிலையில் 22.08.2025 அன்று தற்காலிக தூய்மை பணியாளர்களுக்கு செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்கள். உடன் சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.வை.முத்துராஜா (புதுக்கோட்டை), எம்.சின்னத்துரை (கந்தர்வக்கோட்டை), முன்னாள் அரசு வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், புதுக்கோட்டை மாநகராட்சி துணை மேயர் எம்.லியாகத் அலி, மாவட்ட மேலாளர் (தாட்கோ) திருமதி.எல்.அனிட் விமலின் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.